தலைநகரில் ஜிஜஎஸ்பிஎச் கடைகளை மூட

# இன்னும் உத்தரவு ஏதும் பெறவில்லை

## டத்தோ பண்டார் தகவல்



கோலாலம்பூர், அக். 4-

தலைநகரில் ஜிஜஎஸ்பிஎச் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான கடைகளை மூடுமாறு இதுவரை தங்களுக்கு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்றுக் கூறியது.

ஒருவேளை மேற்குறிப் பிட்ட அக்கடைகளை மூடுமாறு எங்களுக்கு உத்தரவிடப்பட்டால் நாங்கள் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கத் தயார் என கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷரிஃப் கூறினார்.

இவ்விவகாரம் இன்னும் போலீஸ் விசாரணையில் உள்ளது. எனவே இதுகுறித்து தங்களுக்கு இன்னும் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

ஒருவேளை மேலிடத்தில் இருந்து எங்களுக்கு உத்தரவு வந்தால் நாங்கள் அதனைப் பின்பற்றி ஒத்துழைப்புக் கொடுப்போம் என நேற்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் 55ஆவது அமலாக்கப் பிரிவு தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள ஜிஜஎஸ்பிஎச் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் அனைத்துக் கடைகளையும் மூடுமாறு உத்தரவிடப்பட்ட வேளையில் அந்நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துகளையும் பறிமுதல் செய்துள்ளது.

சிலாங்கூரில் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையில் மூடப்பட்ட கடைகள், சமூகநல இல்லங்கள், சமயப் பள்ளிகளின் எண்ணிக்கையைத் தாம் விரைவில் அறிவிக்கப்போவதாக அம்மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

இதனிடையே தாமான் பொட்டானியில் கார் நிறுத்துவதற்கான கட்டணம் கடந்த செப்டம்பர் முதலாம் தேதியில் இருந்து மாற்றம் கண்டுள்ளதாக டாக்டர் மைமுனா கூறினார். செப்டம்பர் முதலாம் தேதியில் இருந்து முதல் 2 மணி நேரத்திற்கு 3 ரிங்கிட்டும் தொடர்ந்து ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு ரிங்கிட் எனக் கட்டணம் வசூலிக்கப்படும். இதற்கு முன்பு ஒருமுறை நுழைந்தால் 4 ரிங்கிட் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட்டது.